# திராவிடநாடு

12—4—59 | வார வெளியீடு | விலை 16 காசு


# உழைப்போர் தவிக்கையிலே 'ஊட்டி' ஒரு கேடா?

சென்னை சட்டமன்றம் உதகமண்டலத்தில் கூட்டப்பட இருப்பதனைத் தி. மு. கழகம் கண்டித்துவருவது பொதுமக்கள் அறிந்ததேயாகும்.

அங்கு சட்டமன்றத்தைக் கூட்டுவதால் உதகையை வனப்புள்ளதாகவும் வளமுள்ளதாகவும் செய்ய முடியும் என்று அரசினர் சொல்லும் காரணம் பொருந்தக்கூடியதல்ல என்பதையும், வரிப்பணம் வீண் விரயமாகும் என்பதையும் விளக்கிச்சொல்லியும் அரசாங்கம் செவி சாய்க்காமல், 20—4—59 அன்று உதகையில் சட்டமன்றத்தைக் கூட்டவிருக்கிறார்கள்.

**அரசாங்கத்தின் இந்தப் போக்கைக் கண்டிக்கும் வகையில், தி. மு. கழகம் உதகை சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என்று முடிவெடுத்துவிட்டது.**

*உதகையில் சட்டமன்றம் கூடும் நாட்களில் தி. மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் 15 பேரும், சி. என். ஏ அவர்கள் தலைமையில், கழக உறுப்பினர்களின் தொகுதிகளில் கீழே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சி விவரப்படி சுற்றுப்பயணம் செய்வார்கள்.*

இங்ஙனம்,

**எம். பி. சுப்பிரமணியம், ஏ. கோவிந்தசாமி**

செயலாளர்கள், சட்டமன்ற தி. மு. க.

*சுற்றுப்பயண நிகழ்ச்சி:*

| | | | |
|---|---|---|---|
| ஏப். 23: | குளித்தலை | ஏப். 27: | திருவண்ணாமலை |
| 24: | ஆத்தூர் | | போளூர் |
| 25: | கள்ளக்குறிச்சி | 28: | வேலூர் |
| | விருத்தாசலம் | 29: | காஞ்சிபுரம் |
| 26: | வளவனூர் | 30: | சென்னை |

# புதிய வரிகளைப் போட்டுவிட்டு,

## கரியாக்கப்போகிறார்கள் நம் காசை!!

# கேட்டீரா! சேதி!

சிலர் கண்ட புதுமைகள் உலகம் வியக்கத்தக்கதாகி நிலைத்து விடுகின்றன! அப்படிப்பட்ட புதுமை கண்டவர்களில் ஒருவர்தான் தோழர் ஆர். முத்தையா!! தமிழ் டைப்ரைட்டரை முதல் முதலாகக் கண்டுபிடித்தவர், இவர்தான். ஆசியா முழுதும், இன்று அவர் கண்டுபிடித்த தமிழ் டைப்ரைட்டர்கள் இருக்கின்றன. கடல் கடந்து மலேயா சென்ற தமிழர்களில் இவரும் ஒருவர். தலைமைக் கணக்காளராயிருந்த இவர், இந்த முயற்சியிலீடுபட்டார். 216 தமிழ் எழுத்துக்களை 44 ஆகக் குறைத்தார். ஒரு ஜெர்மன் கம்பெனியுடன் தொடர்பு கொண்டார். தமிழ் டைப் ரைட்டர், உருவாயிற்று. இந்தச் சேதி, முதல் முதல் கிட்டியபோது, பலர் ஆச்சரியமடைந்தனர்!! அப்படிப்பட்ட பேரறிஞர், தனது 74வது வயதில் அண்மையில் கோலாலம்பூரில் இயற்கை எய்திவிட்டார். அவருடைய பெயர் என்றும் நிலைத்துநிற்கும்.

*

'நம்ம சர்க்கார்' செருப்புத் தொழில் செய்கிறது என்றால், பலருக்கு ஆச்சரியமாயிருக்கும்! 'மாலு' என்கிற பெயருடன் சென்னை அரசினர் தயாரித்து வருகிறார்கள்!! செருப்புக்கு, கிழக்கு ஐரோப்பாவில், நல்ல கிராக்கியிருக்கிறதாம். 50 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 3,50,000 'ஜோடி' செருப்புக்களை இதுவரை, இரஷ்யா வாங்கிச் சென்றிருக்கிறதாம். போலந்து 10,000 பெண்கள் செருப்புகளை வாங்கியிருக்கிறதாம். கிழக்கு ஜெர்மனி 60,000 ஜோடிகளுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறதாம். ஏ, அப்பா! தேவலையே!! நம்ம சென்னை சர்க்கார் நடத்தும் தொழிலுக்கு இவ்வளவு கிராக்கியா? என்று திகைக்காதீர்கள். இந்த 'ஆர்டர்கள்' எல்லாம் இங்கே அல்ல! வடக்கேயுள்ள ஆக்ராவுக்குக் கிடைத்திருக்கிறது!! அந்த ஒரே ஒரு ஊரில் நடக்கும் குடிசைத் தொழில், அமோகப்பெயர் வாங்குகிறது, வெளிநாட்டில். இந்தத் தகவலாவது, சென்னை சர்க்காருக்குத் தெரியுமோ, தெரியாதோ, நாமறியோம்.

*

தெற்கில் விளையும் தேயிலைக்கு பாரசீகத்தில் நல்ல கிராக்கியிருக்கும் என்று பாரசீக தேயிலைக் கழகத்திலிருந்து வந்துள்ள மன்சூரி என்பவர், கல்கத்தாவில், சொல்லியிருக்கிறார்! பக்கத்திலுள்ள துறைமுக மூலம் ஏற்றுமதி செய்யும் வசதி இருப்பதாலும், தரமும் குணமும் சிறந்திருப்பதாலும், நிறைய விற்கும் என்று தெரிவித்திருக்கிறார். இந்த வசதி, இந்திய உபகண்டத்தின் பிற இடங்களிலுள்ள தேயிலைக்கு இல்லாததால், அவைகளின் விலையை விட, குறைந்த விலைக்கு இங்கே விளையும் தேயிலை போகுமென்றும், அதனால், ஏராளமாகப் பாரசீகர் வாங்குவார்களென்றும் தெரிவித்திருக்கிறார். இதன்மூலம், நிறைய வியாபாரம் செய்து பணம் பெறலாம் நாம்! ஆனால், அதிகாரம் ஏது நமக்கு? டில்லியிடமன்றோ இருக்கிறது!!

*

அப்பாடா! கடைசியாக டில்லியிலிருந்து ஒரு நல்ல சேதி வருகிறது. திருச்செங்கோடு வட்டாரத்திலும், சூரியா மலைக் குன்றுகளிலும் யுரேனியம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை வந்துவிட்டதாம், டில்லிக்கு. இனிமேல், அதனைத் தோண்டி எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாம். பார்லிமெண்டில், தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எப்போது மேற்கொள்ளப்படும் என்று தெரியவில்லை, தகவலில். அதற்கு, எத்தனை ஆண்டுகள், காத்திருக்க வேண்டுமோ? கண்டார் யார்!!

*

பசுவும் குதிரையும் எனக்கு ஒன்றுதான் என்றாராம் பண்டித நேரு! ஆகா, அதெப்படிச் சொல்லலாம், பசு காமதேனுவாயிற்றே, இப்படிச் சொன்னதன் மூலம் இந்துக்களின் மனதைப் புண்படுத்திவிட்டார் நேரு. அதற்காக அவர்மீது மானநஷ்ட வழக்குப் போட்டிருக்கிறேன். ஒரு ரூபாய், மானநஷ்டம் தரவேண்டும் என்று ஒரு இந்துமகா சபைக்காரர் வழக்குப் போட்டிருந்தார். அவ்வழக்கை, அர்த்தமற்றது என்று கூறி அலாகாபாத் முன்சீப், இந்தக் கிழமை தள்ளுபடி செய்திருக்கிறார்.

*

அண்மையில் அழுகும் பொருள்களுக்கெல்லாம் வரி போடப்பட்டிருப்பதை எதிர்த்துக் கண்டனமும் கூக்குரலும் கிளப்பியதல்லவா? இதோ ஒரு சேதி: திருப்பூரிலே உள்ள அகில பாரத சேவா சங்கமும், தமிழ்நாடு சர்வோதய சங்கமும், வாங்கிய பருத்திக்கு விற்பனை வரி கிடையாது என்று சர்க்கார் சலுகை கொடுத்திருக்கிறார்கள். இதேபோல, ஏன் கைத்தறிக்கும் இன்னும் சில பொருள்களுக்கும் தரக்கூடாது? பாராள்வோர், பாரபட்சம் காட்டலாமா! மேற்படி சங்கத்துக்குச் சலுகை தந்ததுபோல, வதையும் ஏழைக் கூடைக்காரர்களுக்கும் சலுகை தந்தால் என்ன!!

*

நேருவின் கையைப் பலப்படுத்த வேண்டும்!-என்று இதுநாள்வரை கூறிவந்த இந்தியக் கம்யூனிஸ்டுகள், திபெத் விஷயத்தில், சீனாவின்பக்கம் நிற்பது போல ஒரு அறிக்கை விட்டிருக்கின்றனர் என்பதுபற்றி பார்லிமெண்டில் பலத்த விவாதம் நடந்தது. இந்தியப் பகுதியைச் சேர்ந்த காலிம்பாங் என்ற இடத்திலிருந்துதான் திபெத்தியர் கிளர்ச்சிகளை நடத்தினர் என்கிற சீனாவின் குற்றச்சாட்டை, தமது அறிக்கையில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் வலியுறுத்துகிறது. இப்படி, பிறநாட்டுக்கு நம்மைக் காட்டிக் கொடுக்கலாமா! சொந்த நாட்டைவிட, எசமானன்கள்மீது விசுவாசம் காட்டுவதுதான தேச சேவையா!! — என்று பலத்த கண்டனம் எழும்பிற்றும், பார்லிமெண்டில்.

*

# வாடகை வண்டி!

**சி. என். ஏ.**

"கட்சி எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்படாதவர்கள் வெளியேறலாம். அடங்கி நடக்காதவர்களுக்கு, இங்கு வேலையில்லை. அவர்கள் விலகிச் செல்லலாம்!"

*வீரம் கலந்துவந்துள்ளது இந்தப் பேச்சில்! வேறுயாரிடமிருந்துமல்ல, காங்கிரசின் இன்றைய தலைவர் திருமதி இந்திரா காந்தியாரிடமிருந்து!!*

*தலைவர் பட்டமும் பெறுவதற்கு முன், திருமதியார், காங்கிரசுக்குள் மாற்றம் விரும்பும் கூட்டத்திலிருந்ததாகச் சொல்வர். அம்மையாரின், அந்தக்காலப் பேச்சினைக் கேட்டோருக்கு, 'இடதுசாரிகள்' என்கிறார்களே அந்த வாடையும் தென்பட்டதுண்டு.*

*அம்மையார் அவர்கள் "அதிகாரபூர்வமான காங்கிரசின்" போக்கினை மாற்றப்போகிறாரா அல்லது அதே வழியிலேயே தானும் செல்லப்போகிறாரா, என்பதை நாமறியோம். எனினும், இந்தப் பேச்சு, வரவேற்கத் தக்கது! வார்த்தைகளாக வெளிவந்துள்ளன என்பதால்!!*

*"பிடிக்காதவர்கள் போகலாம்!" என்கிறார். 'நாகபுரிக்கு'ப் பிறகு, காங்கிரசுக்குள்ளே, கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளன. துணிவுகொண்டோர், தங்கள் மனதைத் திறந்து காட்டவும், முன்வந்திருக்கின்றனர். இந்தச் சமயத்தில், இவ்வளவு உறுதியுடன் வெளியிடுகிறார் அம்மையார். வேகம் ஒலிக்கிறது குரலில்.*

*அறிக்கைகள் விடுவோர் — அடாது என்போர் -- கூடாதெனக் குமுறுவோர், 'நாகபுரி'யிலேயே, தங்கள் எதிர்ப்பினைக் காட்டியிருக்கலாம். எண்ணத்தில் தூய்மையும், சொல்லித்தானாகவேண்டும் என்கிற உறுதியும் கொண்டோர், அவ்வண்ணம்தான் செய்திருக்க வேண்டும். நேரு பண்டிதருக்கு எதிரே நின்று எப்படிச் சொல்வது? ஒலிக்குமா நம்குரல்! என்ன நினைப்பாரோ! — என்றோ என்னவோ, எவரும் ஏனென்று கேட்கவில்லை; எதுவும் பேசவில்லை.*

*தீர்மானங்கள், நிறைவேற்றப்பட்டன நாகபுரியில். நேருபண்டிதருக்கு மாறான கருத்துக்கொண்டோர், வாளா இருந்தனர் அது போது!!*

*யாரோ எதிர்க்கப்போகிறார்கள், மாறுபாடாகப் பேசப்போகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நாம் எழுந்து நின்றதும், இந்தப் பேச்செல்லாம் இருந்த இடம் தெரியவில்லையே என்று எண்ணியிருக்கக் கூடும்; எக்களிப்புங் கொண்டிருக்கக் கூடும் நேரு.*

*நமக்கெதுக்கு! நாம்போய் ஏன் நேருவை எதிர்த்துக்கொள்ள வேண்டும்? — என்றே பலபேர் பதுங்கியிருக்கவேண்டும். வம்புக்குப்போய், அவரின் வசைகளைக் கேட்பதற்குப்பதில், அடங்கியிருந்துவிடுவது ஆயிரம் மடங்கு மேல் என்றே இருந்திருக்க வேண்டும்.*

*தான் சொல்வதை, எவராயினும், உடனே ஒப்புக்கொள்ள வேண்டும். அதுதான் நேருவுக்குப் பிடிக்கும்; இப்படி ஒப்புக்கொண்டுவிட்டபிறகு, அவர்கள் என்னென்ன கேட்டாலும் நேரு மறுக்கமாட்டார்! இலகுவில் காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாம் அவரிடம்!! — ஆவேசமாகப் பேசி, ஆர்வத்தோடு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாக இருந்தாலும் கூட, கொஞ்சங் கொஞ்சமாக அவர் கூட்டவும் குறைக்கவும், வேண்டியவர்களுக்காக வளைக்கவும் நெளிக்கவும், தயங்கமாட்டார். அவருக்கு வேண்டியதெல்லாம், தான் ஒன்று சொல்லும்போது, 'அது தவறு, கூடாது' என்று எவரும் எதிர்ப்புக்குரல் கிளப்பாமலிருக்கவேண்டும், அவ்வளவுதான். பிறகு, அவர்களுக்காக, எதுவேண்டுமானாலும் செய்வார் நேரு; எப்படி வேண்டுமாயினும் அவருடைய மனதை மாற்றிக்கொள்ளும்படி செய்யலாம் — நேருவுடன் நெருங்கிப் பழகுவோருக்கு, இந்தச் 'சூட்சமம்' தெரியும்.*

*தீர்மானங்கள் செயல்படுமோ, செயல்படுகிறதா என்பதுகூட அவருக்கு அவ்வளவு முக்கியமல்ல! ஒவ்வொரு மாநாட்டிலும், அவர் வீராதி வீரராக விளங்க வேண்டும் — தனது 'வெற்றியை' நிலைநாட்டவேண்டும், அவ்வளவுதான்!!*

*எதிர்ப்பவர், முதலில் சரணடையவேண்டும் — பிறகு, அவன் நேசனும் ஆகலாம், தன்வட்டா*

ரத்துக்குத் தளபதியாகக்கூடஆகலாம் — முதலில், தன் காலடிவிழ வேண்டும் என்று அந்தக் காலத்து மாமன்னர்கள் நினைப்பதுண்டல்லவா! கிட்டத்தட்ட, அதுபோல எனலாம், நேருவின் போக்கினை!!

பண்டிதரின் இந்தக் 'குறுதிசயத்தை' அறிந்தோர், இப்போது 'ஆமாம்' போட்டுவிடுவோம், அதனால் என்ன நஷ்டம் வரப்போகிறது, நாளைக்கு அவரிடமே சொல்லிச் சரிசெய்துகொண்டால் போகிறது என்றே இருப்பர்.

தலையாட்டுவதுதானா நம்வேலை? என்போரும் உண்டு, அப்படிப் பட்டவர்களிலே சிலர், மனந்துணிந்து பேசுவர்-பேசியிருக்கின்றனர். அவர்களுக்குத்தான், அம்மையார், எச்சரிக்கை விடுக்கிறார்! "ஏற்றுக்கொண்டோம் என்று சொல்வதானால் இருங்கள். இல்லாவிடில் போங்கள்" என்று சொல்கிறார்!!

இதுவரையில் எப்படி, எவரெவர் எங்கெங்கேயிருந்தனர், என்பதல்ல பிரச்சினை இனிமேல்!! அவ்வளவுதான் தெரிகிறது, பேச்சில்!!

திருமதியாரைப் பார்த்துக் கேட்கத் தோன்றும், "அம்மையே காங்கிரசின் கொள்கைகளை ஏற்காமல் எதிர்க்கும் மனம்படைத்தோர் எப்படி நுழைந்தார்கள் காங்கிரசுக்குள்?" என்று. எதிர்க்கும் எரிச்சலாளர்கள் எப்படி வந்தார்கள்—ஏமாந்த நேரம்பார்த்து நுழைந்தார்களா? அல்லது ஏற்றிப் போற்றித்தேர்தல்சமயத்தில் உள்ளே அழைத்துவரப்பட்டவர்களா—என்று கேட்கத் தோன்றும். பத்தில் எட்டுப்பேர், பரவச கிதம்பாடி, பராக்குகள் பல கூறி, உள்ளே கொண்டுவரப்பட்டோர் என்பதுதான் உண்மை!!

கூடைமை நிரப்புவதற்காக, ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள பண்டிதரின் பல்லக்குத்தூக்கிகள் — பெரிய தலைகள் கூட! — எங்கெங்கே வலைவீசி, எவரெவரை இழுத்துப்போட்டனர் என்பதனை அம்மையார் அறியவேண்டும்.

வெற்றி! வெற்றி! எப்படியாவது தேர்தலில் வெற்றிகாண வேண்டும்!—யாராயிருந்தாலும்சரி, செலவழிப்பாரா, ஜெயிப்பாரா, இழுத்துப் போடு என்று சேர்க்கப்பட்டவர்கள்தான் அதிகம்--காங்கிரசில்.

காங்கிரசின் கொள்கைகளைத் தெரிந்திருக்கவேண்டுமென்கிற அவசியமில்லை—கதரைத் தொட்டறியாதவர்களாயினும் பரவாயில்லை— நேற்று வரையில் காங்கிரசை எதிர்த்தவர்கள் என்றாலும் சரி-தேர்தலில் வெற்றிபெற முடியுமா—ஆமெனில், அழைத்துவா, என்பதே பல 'தலைவர்களின்' போக்காகும். சமதர்மத்தைத் சங்கட நாதமாகக் கருதுவோராயிருக்கலாம்! இருக்கட்டும்; அதனாலென்ன? காங்கிரஸ் புனிதமெனக் கருதும் பாதைகள் புழுதிக்குச் சமானம் எனக் கருதுவோராயிருக்கலாம்! பரவாயில்லை. தேர்தல் போருக்குச் சரியான ஆளா? அழைத்துவா! மாலைபோடு! வரவேற்புக் கூறு!—இதுதான் பல இடங்களில் நடப்பது.

இப்படியெல்லாம் நடப்பது தெரியாதா நேருவுக்கு? தெரியும். தெரிந்து என்ன செய்தார்? தளபதிகளைக் கண்டித்தாரா? தடுத்தாரா? அவரும் என்ன நடந்தாலும் சரி, தேர்தலில் அதிகம்பேர் வெற்றிபெற்றார்கள் என்கிற பட்டியல் வந்தால் போதும் என்றே இருந்தார்!!

ஓடிப்போன இந்தப் பத்தாண்டுகளும் காங்கிரசிலுள்ள 'ஏஜண்டு'களுக்குக் கொண்டாட்டமாயிருந்தது—ஆட்களைப் பிடித்திழுத்துப் போட்டு, வெற்றி கொண்டாடினர்; மார்பை நிமிர்த்திக்காட்டினர்.

புதிதாக ஒருவரையுமே காங்கிரசில் சேர்க்கக்கூடாது என்று நாம் சொல்லவில்லை. காங்கிரசின் சமதர்மம் பற்றியோ, கொள்கைகளைப் பற்றியோ கொஞ்சமும் கவலைப்படாதவர்களெல்லாம் இழுத்துவந்து நுழைக்கப்பட்டனர் என்பதனையே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இது காங்கிரசுக்குப் பலமளிக்குமா?

வாடகைக்குக் காங்கிரசை வாங்குகிறோம் என்றேபலர் நினைத்தார்கள்!

வருந்தி அழைத்து, வாழ்த்துமளித்து, வசதிகளெல்லாம் தரக் காத்திருக்கையில் காங்கிரசைப் போய் நாம் ஏன் எதிர்க்கவேண்டும் என்றெண்ணியோர் பலர் சந்து கிடைத்தால் நுழைந்து சந்தர்ப்பம் கிடைப்பதால் அக்கட்டைதச் சுருட்டும் ஆசைகொண்டோர்-எண்ணினர்- அடடா பெரியகட்சி, தியாகிகள் வளர்த்து வைத்திருக்கும் கட்சி, செந்நீரும் சிறந்த தொண்டும் புரிந்தோர் பாடுபட்டு உண்டாக்கிய செல்வாக்கினைப் பெற்ற கட்சி, நமக்குக் கிடைக்கும்போது, எதற்காக விடவேண்டும், நுழைவோம், நம்விருப்பங்களை அடைவோம் என்று கருதினர்.

திருமதியார் விபரமறிய விரும்புவாராயின், வேறெங்கும் 'பயணம்' நடத்தவேண்டியதில்லை. காங்கிரஸ் எம். எல். ஏ.க்களின் பட்டியலையும், நகரசபைத் தேர்தலுக்கு நிறுத்தப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்களின் வரலாற்றையும், ஒரு தடவை பார்த்தால் போதும்! காங்கிரஸ் மீது அவர்களுக்குள்ள பற்று, பாசம் கருதியல்ல, இருப்பதைவைத்து வெல்வோம் எனறு கூறியதை யொட்டியே, தேர்தெடுக்கப்பட்டனர் என்பது எல்லோருக்கும் தெரியும்!!

"வரவேண்டும் காங்கிரசுக்குள் என்போரை, எப்படித் தடுக்க முடியும்?" என்று தேவியார் கேட்கலாம். வருவோரை, வராதே எனச் சொல்லமுடியாதுதான். ஆனால், அவர்கள் சாதாரண காலத்தில் வந்தவர்களா? தேர்தலுக்காக 'அழைத்து நிறுத்தப்பட்டவர்கள் — அவ்வளவுதான்!! கதரைக் கண்டறியாதோர், திரிபுராவும் தெரியாது; அரிபுராவும் அறியார், தேர்தலைத் தவிர வேறேதும் தெரியார், அறியார்; அப்படிப்பட்டோர்தான் இன்றைய தினம் காங்கிரஸ் கூடாரத்திற்குள் குழுமியிருக்கிறார்கள்.

இதா வழி, ஒரு கட்சியை வளர்க்க? இவர்களாலா வளரும் கட்சியின் கொள்கைகள்!!

இந்திரா காந்தியார், பலதரப்பட்ட பட்டியலையும் எடுத்துப் பார்ப்பதானால்-கடினமான வேலைதான்! எனினும் பார்ப்பாரானால்—காங்கிரஸ்கட்சி, சுயநலமிகளுக்கும் சூதாடிகளுக்கும், பயன்படும் சொக்காட்டமாகியிருப்பதை அறியலாம்.

(8-ம் பக்கம் பார்க்க)

# தாசர்கள் புத்தி!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [12 4—59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 39

கேட்டீரோ, தோழர்காள்! கேடுகெட்ட இந்த ஆட்சிக்கு நகராட்சி மன்றத் தேர்தலிலே நல்ல பாடம் புகட்டிவிட்டோமென மகிழ்ந்திடும் மக்காள்! நாட்டு வலிவை வாங்கி 'ஊட்டி'க்குச் சென்று ஊதாரித்தனம் செய்யும் ஒரு ஆட்சியன்றோ உள்ளது இங்கே எனச் சிந்தை நொந்திடும் சிலர்காள்! வெண்டைக்கும் சுண்டைக்கும்கூட வரிபோடும் வன்கணாளர்கள் உள்ளனரே என்று வெந்திடும் வியாபாரிகளே! தந்திடலாகாதா 'தமிழ்நாடு' எனும் பெயரை என்று கேட்டிடும் தமிழ்ப் புலவர்களே! தரக்கூடாதோ ஒரு இடம் வள்ளுவருக்கும் பாரதிக்கும் தபால் தலைகளில் எனக் குமுறிடும் தமிழ்ப்பற்றுக் கொண்டோரே! தவிக்கும் மக்களே! நலியும் நாட்டினரே!—விரைவில், இங்கே, 'விஜயம்' செய்யவிருக்கிறாராம், நேரு பண்டிதர் அவர்கள். இத்தடவை, தென் மாவட்டங்களுக்கெல்லாம் செல்லப்போகிறாராம்.

நாம் கூறிடும் குறைகளைக் கேட்க அல்ல, அவர் வருவது; எப்படி நடக்கிறது நமக்குக் கட்டுப்பட்ட ஆட்சி எனக் கண்காணிக்கவும் அல்ல. 'ஜோதி' காட்ட வருகிறார்! 'தோல்வி'யால் ஏற்பட்டுள்ள சூழ்நிலை இருளுக்காக ஆசிய ஜோதி இங்கே இறக்குமதி செய்யப்படுகிறார்!!

எனவே, வழக்கம்போல் எதிர்க்கட்சிகள் மீது தாக்குதல், காமராசருக்குப் பாராட்டுகள், காங்கிரசுக்கு ஆதரவு தாரீர் எனும் வேண்டுகோள் விடுதல், இவைதான் நடக்கும். குறைகளைக் கேட்க அல்ல, கோமன் வருவது! ஏனய்யா காமராசரே, சென்னையிருக்க 'ஊட்டி' ஏன்? போட்டிருக்கிறீராமே வரி, புடலைக்கும் பூசனிக்கும்? குமுறுகின்றனராமே மக்கள் ஏன்? — என்றெல்லாம், குறைகண்டு, அறிவுரை கூற அல்ல, அவர் இங்கே வரப்போவது!!

எனவே, காங்கிரஸ் தோழர்கள், தங்களுக்கேற்பட்டுள்ள தோல்வியைமறைக்க, 'விஜயத்தை' வெகுவாகப் பயன்படுத்த முனைவர். தட்டிகள் கட்டியும், பந்தல்கள் அமைத்தும், கொடிகள் நாட்டியும், கோபுர அளவுக்கு மலர்களைக் கொட்டியும், உற்சவம்போலக் கொண்டாடுவர். வேறு வேலைதான் என்ன இருக்கிறது!! அரசு கையிலே உள்ளதால், காமராசர் அதற்கான எல்லா வாய்ப்புகளையும் செய்துதராமலா போவார். அதிகாரிகளுக்குத் தாக்கீதும், நேசர்களுக்குக் கடிதமும், காங்கிரஸ் கமிட்டிகளுக்கு சுற்றறிக்கைகளும், பறக்கும். கட்சித் தலைவியாம் இந்திராவைப் பெற்றெடுத்தவர்! ஆட்சிக்கும் பிரதமர்!! அவரது வருகையை, வரப்பிரசாதமென, காங்கிரசாரும் கருதவே செய்வர். இதற்கான ஆரம்ப உத்தரவுகள், அந்தந்த வட்டாரத்துக்கும், வந்துவிட்டதாகக் கோவில்பட்டியிலிருந்து 'மெயில்' நிருபர் தகவல் தருகிறார்: பாலங்களைப் பழுதுபாருங்கள், மைல் கற்களுக்குப் புதுச் சுண்ணம் போடுங்கள், பாதைகளை அழகுபடுத்துங்கள் என்றெல்லாம் அரசு ஆணை பிறப்பித்துவிட்டதாம். அதோடு ஊர் தோறும் உள்ள பெயர் போர்டுகளைப் புதுப்பிக்கவும் சொல்லியிருக்கிறார்களாம்!!

இதிலென்ன உனக்குக் குத்துகிறது, குடைகிறது—எந்தெந்த ஊர்கள் என்று பண்டிதர் தெரிந்துகொள்ள வேண்டாமோ—'பாஞ்சாலங்குறிச்சியும், பாளையங்கோட்டையும், சிவகெங்கைச்சீமையும், மூதூர் மதுரையும், முத்துதந்த தொண்டியும், பார்த்தமாத்திரமே படவேண்டாமோ நேருவின் கண்களில்—அதற்காகத்தான் இந்தப் போர்டுகள், நேருவின் வருகைக்காக மட்டுமல்ல, வரும் வெளியிடத்தார் எல்லோரது வசதிக்காகவும்; ஊர்ப்பெயர்களை ஒவ்வொரு ரோடிலும் எழுதச் செய்திருக்கிறது எமது அரசு! இது ஏன் வீண்செலவு என்று இதற்கும் பல்லவி பாடப்போகிறாயா? — எனக் கேட்கக் கூடும், காங்கிரஸ் தோழர்கள்.

நிறுவப்பட்டுப் புதுப்பிக்கப்படும் இந்த 'போர்டுகள்' வேண்டாமெனச் சொல்லவில்லை, நாம். உதகைக்குச் சட்டசபையை 'தூக்கிப்'போய், காசைக் கரைப்பதைப்போன்றதல்ல, இது! எனவே, குறைபடவில்லை, நாம். ஆனால், இந்தப் போர்டுகள், இதுவரை, தமிழில்மட்டுமின்றி ஆங்கிலத்திலும் எழுதி வைக்கப்பட்டு, விளங்கி வருகின்றதாம்!!

அட, இதென்னப்பா, இதிலென்ன குறைகண்டாய், குறைமதிகொண்டோனே, தமிழைப் போற்றும் இந்த அரசு எப்படி ஆங்கிலத்திலும் எழுதிடலாம் எனக் கேட்கிறாயோ, அந்நிய மொழியென்பீர்களே ஆங்கிலத்தை, அதனை அழைக்கலாமோ துணைக்கு என்று இண்டல் செய்கிறாயோ என்று சீறலாம், காங்கிரஸ் நண்பர்கள்.

நேரு அவர்கள் அறியார் தமிழ்! நெடுந்தொலைவிலிருந்து, தமிழகம் காணவரும், தமிழறியாதோரும், ஆங்கிலமிருப்பின், அறிந்துகொள்வர், நமது ஊர்களை. எனவே, தமிழுக்குக் கீழே ஆங்கிலத்திலும் எழுதுவது, சரியே; தவறெனக் கூறோம் நாம். செய்வன திருந்தச் செய்வதுதான் நல்லது. ஆனால், மாட்சிமை தங்கிய காமராசரது ஆட்சி, பச்சைத் தமிழரின் அரசு, இருக்கும் தமிழும் ஆங்கிலமும் போதாதென்று, எல்லாப் பலகைகளிலும், இந்தியால் பெயர்களை எழுதும்படி, உத்தரவு போட்டிருக்கிறதாம்! அதையொட்டி ஒவ்வொரு ஊரிலும், இந்தி எழுத்துக்களை எழுதிக்கொண்டிருக்கிறார்களாம்!!

**இருக்கிறது, தமிழ்.**
**ஆங்கிலமும் உண்டு.**
**இந்நிலையில், இந்தி !!**

அதுவும், இத்துணை நாளும் கிடையாது, இப்போது நேரு வரப்போகிறார் என்றதும், இந்தியையும் எழுதச் சொல்லி, உத்தரவு அனுப்பியிருக்கிறது சென்னை அரசு. ஏனிந்த அவசரம்? இதனால் என்ன பலன்? யாருக்கு நன்மை?—எனக் கேட்கிறோம்.

ஆங்கிலம் அறியார் நேரு, ஆகவே இந்தியில் எழுதுகிறோம் எனின், பொருளுண்டு. நல்ல இந்தி எனக்கும் தெரியாது, என்று நவில்பவர், நேரு. எனவே, இப்போது, இந்தியிலும் ஊர்ப்பெயர்களை ஏன் எழுதவேண்டும்.

இந்திக்கு அஞ்சோம்! இந்தி தெரிந்தால்தான் உத்தியோகம் தருவோம் என்று எப்படிச் சொல்லலாம் டில்லி? விடோம், நாங்கள்!—என்று, வீராவேசமாகப் பேசத் தவறுவதில்லை, நிதியமைச்சர். தமிழுக்குக் கிடைத்த 'புது வள்ளல்' போல, தன்னைக் காட்டிக்கொள்ளப் பெரிதும் முயல்கிறார். தமிழ்மீது, தி. மு. க-வுக்கு மட்டுந்தானா பற்று; எமக்கும் உண்டு, இதோபாரீர், தமிழை ஆட்சிமொழியாக்கிவிட்டோம்; தமிழ்ப் பெயர்களைக் காண ஒரு ஆலோசகரையும் நியமித்திருக்கிறோம், சர்வகட்சியையும் கொண்ட குழுவினையும் போட்டிருக்கிறோம், என்று சங்கநாதம் செய்யப்படுகிறது. ஆனால், இதோ, பெயர்ப்பலகைகளில், இருக்கும் தமிழும் ஆங்கிலமும் போதாதென்று, இந்தியிலும் எழுதுகிறார்கள்! அதுவும், இத்தனை நாளுமில்லாமல், நேரு வருகிறார் என்றதும் அவசர அவசரமாக எழுதும்படி உத்தரவு போட்டிருக்கிறார்கள்!!

'போர்டு'களுக்கெல்லாம் புதுக் கருப்புத் தீட்டி, புதிதாக வாங்கிய வண்ணம்கொண்டு, இந்தப் பெயர்களை எழுதுவதால் ஏற்படும் செலவு ஒருபுறம் இருக்கட்டும். அரசினருக்கு இந்தப் புதுமையில், ஏனிவ்வளவு அவசரமும் அக்கரையும் கிளம்பியிருக்க வேண்டும்? நாமறிந்த மட்டில், இப்படிச் செய்யுங்கள் என்று, டில்லியிலிருந்து எவ்வித அவசர உத்தரவும் வந்ததாகத் தகவலில்லை. வலுவில் செய்கிறது காமராசர் அரசு! என்ன அவசியம் ஏற்பட்டதென அறிய விரும்புகிறோம்!!

* * *

"அடடா! வரப்போவது யார் தெரியுமா? கலெக்டர்!! அவருக்கு ரோஜாப் பூ மாலையென்றால் பிடிக்குமாம்."

"முல்லைமீதுதானே, அவருக்கு மோகம் என்று சொல்வார்கள்."

"சரி! ஓய், என்ன நஷ்டம்? முல்லை ஒரு கூடை! ஆயிரம் ரோஜா!! இரண்டுமே, ரெடி செய்..."

* * *

இது பழையகால முறை! மேலதிகாரிகளைக் 'காக்கா' பிடிக்க, காண்டிராக்டர் முதல், தயவு எதிர்நோக்கும் காரியவாதிவரை, இப்படியெல்லாம் எது பிடிக்கும் என்று அறிந்து செய்வார்கள்!! அதுபோல, இந்திக்கும் நாங்கள் ஆதரவளிக்கிறோம் என்பதனை நேருவுக்குக் காட்டிக்கொள்வதன்றி, வேறென்ன காரணம் இருக்கமுடியும், இந்த உத்தரவுக்கு இத்தனை நாளுமிலாது, இப்போது, இப்படியொரு அவசர முடிவெடுக்கவேண்டிய அவசியமென்ன.

இரயில்வே போர்டுகளிலிருந்த இந்திகூடக் கூடாது!—என்று, கர்ச்சிக்கின்றார் உண்டு தமிழகத்தில். பெரியார் அவர்கள், இதற்கென, கைவசம் ஒரு போராட்டத்தை, எப்போதும் வைத்துக்கொண்டேயிருக்கிறார். அவர் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகமும், இப்படியெல்லாம் இந்தியை நுழைக்க வடவர் செய்யும் சதியென, நெடுநாட்களாகச் சொல்லியே வருகிறது. நாம் காமராசருக்கு எதிரிகள்! பெரியார் அப்படியல்ல!! இருந்தும் பெரியார் அவர்களுடைய, உள்ளத்தைக் குத்துவதுபோல, காமராசரது அரசு, ஒவ்வொரு ஊரிலுள்ள பெயர்ப்பலகையிலும் இந்தியை எழுதச்செய்திருக்கிறது — ஆங்காங்கும் எழுதப்படுவதாக 'மெயில்' நிருபர் அறிவிக்கிறார்!!

"எத்தர்கள்! என்னவோ, தமிழ் மக்கள் கண்களில் மண்ணைத் தூவ, தமக்கும் ஆசை உண்டு என்று நடிக்கிறார்கள். தமிழைப் போற்றுவதாக, காங்கிரஸ் அமைச்சர்கள், காட்டிக்கொள்வதெல்லாம் பித்தலாட்டம். தாசர்புத்திகொண்ட இவர்கள், டில்லியைத் திருப்திப்படுத்துவதில் முனைவர்களே

மொழியை, சுயமரியாதையைத் தத்தம்செய்யக்கொஞ்சமும் தயங்காதவர்கள்.”

என்று, இவர்களைப்பற்றி, நாட்டோர் கருதுவது உண்மையென்பதையே உணர்த்துகிறது இந்த நடவடிக்கை! நேரு வருகிறார் என்றதும், அவசரஅவசரமாக இந்தியிலும் இவர்களே வலுவில் எழுதி, வாத்சல்யத்தையும் அன்பையும் காட்ட முனைகின்றனர். இந்த முனைப்பு, தமிழுக்குரிய மதிப்பை, டில்லியினர் தரும்படி செய்வதில் இருந்ததுண்டோ இவர்களுக்கு? எத்தனை தடவை தமிழ்க் கவிஞர்கள் படங்களை, தபால் தலைகளில் போடுமாறு கேட்டு வருகிறோம்! தலைசாய்த்ததுண்டோ டில்லி? தட்டித்தான் கேட்டதுண்டா காமராசரது ஆட்சி!! இந்தியில் எழுதமட்டும், ஓடோடியும் செல்கின்றனர்—நேரு வரும்போது இந்தியிலும் எழுதப்பட்ட எழுத்துக்களைக் காணச்செய்யவேண்டும் என்கிற ஆவல் புறப்படுகிறது—அவசர உத்தரவும் கிளம்புகிறது.

இந்த இலட்சணத்தில், தமிழை வளர்ப்பது தாங்கள்தான், என்றும் சங்கநாதம் செய்கிறார்கள்! எழுதட்டும், எழுதட்டும், இப்படியெல்லாம் எழுத எழுத, தங்களுடைய ஆட்சியின் முடிவு காலத்தை அவர்களே விரைவுபடுத்துகிறார்கள் என்பதுதான் பொருளாகும். தமிழகம், மாற்றாரால் படும்பாடு கொஞ்சமல்ல! தமிழ் நாட்டிலே பிறந்த இவர்களும் தாசர் புத்தியால், குத்திக் குத்திக் குடைந்து கொண்டே இருக்கின்றனர்!! தமிழ் நாட்டவரின் பொறுமைக்கும் எல்லையுண்டு.

தாங்கள் யார் என்பதை, காங்கிரஸ் ஆட்சி, காட்டிக்கொள்கிறது, இந்த நடவடிக்கை மூலம்.

தமிழை வளர்ப்பதாகக் கூறும் இவர்களது, ‘முகமூடி’ கிழிகிறது-உண்மையாகத்தான் இவர்கள் சொல்லுகிறார்களா — ஒப்புக்குப் பேசுகிறார்களா என்கிற ஐயம், இந்தப்போர்டுகளைக் காண்போருக்கு எழும். பிறகு! பிறகு!!

புகையும் எரிமலை, ஒருநாள் வெடிக்கும். பொறுமை, குலையும். தமிழுக்கும் தமிழகத்துக்கும், துரோகம் செய்தோரின், துடுக்கு அடங்கும், ஆவேசம் எழும். அப்போது, சாகசம் சாயும். அக்கிரமத்துக்குச் சாவுமணி, அடிக்கப்படும்.

உறுதி இது! அந்நாள் விரைவில் வரும் என்பது உறுதி!!

★


# தி. மு. கழக முத்தமிழ் மாநாடு

ஏப்ரல் திங்கள் 18, 19 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
காரைக்கால் தோமாஸ் அருள் திடலில் நடைபெறும்.

| தலைவர்: | | திறப்பாளர்: |
|---|---|---|
| மா. கி. தசரதன், எம். ஏ., | ★ | க. இராசாராம், பி. ஏ., |

## அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

கழக முன்னணி வீரர்கள்—நடிகர்கள் மற்றும் பலர் கலந்துகொள்வர்.

கலைஞர் கருணாநிதி பங்கேற்று நடிக்கும்
“உதயசூரியன்”
நாடகம் நடைபெறும்.

★

“கவியரங்கம்” சிறப்பு நிகழ்ச்சியில் கவிஞர்கள் கண்ணதாசன், வாணிதாசன், முடியரசன், கருணாநந்தம், புதுவைச் சிவம், இரவி, துறையூர் ந. அலி பங்கேற்கின்றனர்.

—வரவேற்புக் குழு.

4-ம் பக்கத் தொடர்ச்சி

நாகபுரி முடிவுகளை எதிர்ப்போர் மீது ஆத்திரம் கொள்கிருர் அம்மையார். கட்சியின் தலைவரன்றோ? தவறெனக் கருதார் எவரும்!! ஆனால் ஒன்று, வெளிப்படையாகக் கண்டனம் எழுப்புவதும், பிடிக்கவில்லை எனப் பேசுவதும், தீமையல்ல; வரவேற்கப்படவேண்டும்; அவைகளைப் பொறுமையாகக்கேட்டு, தக்க பதிலும் சொல்லப்படவேண்டும். இதனால், எவ்வித ஆபத்தும் இல்லை. இன்று காங்கிரசில் இப்படிப்பட்டவர்கள் இல்லை. வெளிப்படையாகப் பேசாமல் இரகசியமாகக் குழி தோண்டுவதிலேயே, கண்ணும் கருத்துமாயிருப்போரே அதிகம். இந்த வேலையில், ஓரளவு வெற்றியும் பெற்று வருகின்றனர். எந்தச் சமயத்தில் யாரைப்போற்ற வேண்டும், எப்படி அவர்களை இழுத்துத் தள்ளவேண்டும், என்கிற சமயோசித வேலை தெரியும். இதன் மூலம் பல வழிகளில் அவர்களுக்கு இலாபம் உண்டு.

ஆனால், அரசியல் ஒழுக்கம் என்பது, கெட்டுவிட்டது! இப்படிப்பட்டவர்களால், கட்சி அமைப்புக்கே ஊறு நேர்ந்திருக்கிறது!!

உண்மையில், கட்சியைப் பலப்படுத்த வேண்டுமெனும் ஆசை, அம்மையாருக்கு இருக்குமானால்; எதிர்ப்போர்மீது, பாய்வதாலோ, எச்சரிக்கை விடுப்பதாலோ பயனில்லை. இதனால் பேராசிரியர் ரங்காவைப் போன்றவர்கள்தான் வெளியேறுவார்கள்! அம்மையாருடைய கவனம், "காங்கிரஸ்காரர்களாக்கப்பட்டவர்கள்மீது" இருக்க வேண்டும்!!

அவர்களைப்பற்றி அம்மையார், என்ன முடிவுக்கு வரப்போகிருர்?

ஒரு முடிவுக்கும் வரமுடியாது! அப்படிப்பட்டவர்கள் யாரென்று கண்டுபிடித்து, அவர்களையெல்லாம் வெளியேற்றுவதென்று நடவடிக்கை எடுக்கத் துவங்கினால், அப்பா, பாடு ஆபத்தாகிவிடும்—அன்பர்களோ, நண்பர்களோ இன்றி அவதியும், ஒருவேளை ஆத்திரமும் அடைந்தாலும் அடைவார் அம்மையாரின் அப்பா!!

# விடுதலை விரும்பி!

—[இரா. வளையாபதி]—

பர்மாவில் மிகவும் செல்வாக்குப் பெற்ற டோபமா இயக்கத்தின் நான்காவது மாநாடு போல் மேனில் நடைபெற்றது.

அன்று அந்த மாநாட்டில் மக்கள் வெள்ளம் திரண்டு நின்றது. விடுதலை ஒளிக்கான நம்பிக்கை நட்சத்திரத்தை அவர்கள் விழிகள் தேடின. உயரமான — ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையின்மீது எல்லோர் விழிகளும் மேய்ந்தன. ஆர்வக் குன்றுகள் மேடையை அண்ணாந்து பார்த்தவாறே அமர்ந்திருந்தனர். அறப்போர் வீரர்கள் பலர் துடித்துக்கொண்டிருந்தனர் அரிமா நோக்குடைய அஞ்சா நெஞ்சனைக்காண! சிறிது நேரத்திற்குள் — கடலலைகள் ஒன்று திரண்டு மேடை நோக்கி வருவதைப் போன்ற பேரிரைச்சல் ஏற்பட்டது.

'அவுங்சான் வந்துவிட்டார்' என்று ஒருவன் சொல்லி முடிப்பதற்குள் 'அவுங்சான் வாழ்க' என்ற இடிமுழக்கம் விண்ணை அதிரவைத்தது! மனதை மகிழவைத்தது! வாழ்த்தொலிகள் அடங்க ஒரு நாழிகையாயிற்று. தலைமை வகித்த பேராசிரியர் சயாலூன் எழுந்தார். ஒலி அலை அடங்கி அமைதி பரவியது.

"உங்கள் உள்ளங்களை இலட்சியத்தின் மென்கரங்களால் தடவிய அவுங்சான் அவர்கள் பேசுவார்!" என்று சொல்லி முடிக்கவில்லை அவர். அதற்குள் மக்களின் ஏகோபித்த கைதட்டல் அவரை உட்காரவைத்தது. அவுங்சானை எழவைத்தது. வீரம் செறிந்த அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"இன்று நாம் இங்கு ஒன்று திரண்டு வந்திருப்பதின் நோக்கம் என்னவென்பதை உங்களுக்கு முதலில் நான் சொல்லிவிட ஆசைப்படுகிறேன். நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதையும், நம் இன்பத் திருநாடு எங்ஙனம் விளங்கியது என்பதையும் இன்று ஏற்பட்டுள்ள இந்த இழி நிலைக்கு ஏன் வந்தோம்? எப்படித் தள்ளப்பட்டோம் என்று சொல்வதற்காகத்தான்!"

குழுமியிருந்த மக்கள் விழிகளால் அவரை விழுங்கினர். செவிகளால் அவர் கருத்தை அருந்தினர்.

"வளமையிலும் செழுமையிலும் வாழ்ந்தோம் ஒரு காலத்தில். வற்ருத செல்வப் புனலில் குளித்தோம். வரையிலா இன்பத்தில் திளைத்தோம். ஆனால் இன்று...? ஆண்டவன் அடிமையானான். அண்டியவன் அரசாள்கின்ருன். நம் கண்முன்னாலேயே நம்தாயகம் கொள்ளைபோய் விட்டது. வெள்ளையர் ஏறிவிட்டனர் ஆட்சிப் பீடம்! இந்த அவல நிலைமையைத் தாங்கிடும் அவமானச் சிலைகளாக—அடிமைத் தூண்களாக இனியும் நாம் இருந்தால் நம் இனத்திற்கு இழுக்குத் தேடியவர்களாவோம். எனவே இழுக்கினைத் துடைக்க — ஏற்பட்ட இழிவினை விரட்ட நாம் எல்லோரும் ஒன்றுபடுவோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடரியைப்பிடித்தாட்டுவோம்! அவர்தம் ஆதிக்கத்தை அடித்தோட்டுவோம்! வரப்போகும் உலகப்போரிலே வெள்ளையர்களுக்கு உதவிபுரிய மறுக்கவேண்டும் நாம். இதை ஒவ்வொருவரும் தங்கள் இதயத்தில் எழுதிவைத்துக் கொள்ளுங்கள்!"

கண்களிலே கனல் தெறிக்க—நாக்கிலே உறுதி தொனிக்க

காரமூர்த்தி முழக்கமிட்டார் அவுங்சான். உரிமையைக் குழைத்து கொள்கை வடிவாக்கி, உறுதித் தட்டில் வைத்து உணர்ச்சிக் காரத்தாலெடுத்து மக்களுடைய சிந்தனைப் பசியின் முன் நீட்டினார் அவுங்சான்.

மக்கள அவரது பேச்சை மனத் தராசில் வைத்து எடை போட்டனர். டோபமா இயக்கத்தின் பொதுச்செயலாளராக ஆக்கினர்.

அப்பொழுது பர்மாவில் 'பர்மா'வின் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. பர்மா அரசாங்கம் பயந்தது. தங்கள் ஆதிக்கத்தின் அஸ்திவாரத்தைப் பெயர்த்திட அவுங்சான் கிளப்பிவிட்டானே என்று அஞ்சியது. அவர்களுக்கு ஏற்பட்ட அச்சத்தை அவர்களே தானே போக்கிக்கொள்ள வேண்டும்? அவுங்சான் மீது குற்றம் சுமத்தினர், ஆட்சியைக் கவிழ்க்க ஆபத்தான திட்டம் தீட்டுகிறார் என்று!

அவருக்கு பதினைறு நாட்கள் சிறைத் தண்டனை கிடைத்தது. அஞ்சவில்லை அவுங்சான். ஆதிக்கப் போக்கினரைக் கண்டு சிரித்தார்!

"ஆதிக்கத்திற்கு அலையென எதிர்ப்புக் கிளம்புவதைக் கண்டு ஆத்திரப்படுகிறீர்களே என் ஆள வந்தாரே! எங்கள் நிலத்தை ஏமாற்றிப் பறித்துக்கொண்டது மல்லாமல் எங்களை எட்டி உதைத்து இழிவுபடுத்துகிறாயே! அப்படிபபட்ட எங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் வரும்? எங்கள் ஆத்திரமெல்லாம் ஒன்று திரண்டால் அந்த அக்கினிப் புயலின் வீச்சுக்கு முன் ஏ ஆலீலயே! உனது நிலைமை எப்படியிருக்கும் என்பதை யோசித்துப்பார்!"

எச்சரிக்கை தருவதுபோன்ற அவர் பேச்சு இடம்தேடிகளின் இதயத்தை ஈட்டியாக உருவெடுத்துக் குத்தியது. ஆயினும் என்ன செய்ய...!

சிறையிலிருந்து வெளியே வந்தார். சிறைக்கூடம் அவர் உள்ளத்தைச் சிதைத்துவிடும் என்று கணக்குப் போட்டார்கள் ஆட்சியாளர்கள். அது தப்புக் கணக்கு என்பதை விடுதலையடைந்து வெளியே வந்த அவுங்சானின் முழக்கம் தெற்றெனை எடுத்துக் காட்டியது. அறிக்கையொன்றை விடுத்தார் பர்மிய மக்களுக்கு—டோபமா இயக்கத்தின் சார்பாக!

"நம்நாடு நமதாக நல்லதோர் தருணம். நாட்டினரே! இதை நழுவவிடாதீர்கள்! பிரிட்டிஷ் கழுகுகளுக்கு இந்த இரண்டாவது உலகப்போரில் எவ்வித உதவியும் செய்யாதீர்கள்! இது டோபமா இயக்கத்தின் இலட்சிய மட்டுமல்ல — உங்களது இதய கீதமும் இதுவாகவே இருக்க வேண்டும்!"

1940-ல் அவுங்சான்மீது அரசாங்கம் இராசத்துரோகக் குற்றம் சாட்டிற்று. சிறைக்கும் சிரச்சேதத்துக்கும் நான் சிணுங்கவில்லை. ஆனால்...எனக்குப் பிறகு ...வளர்ந்து கொண்டுவரும் என் இலட்சியம் வலுவற்று வாடிவிடுமே என்று எண்ணினார். ஜப்பானுக்குப் பயணமானார்.

1941-டிசம்பரில் ஜப்பான் ஆங்கிலோ அமெரிக்கர்மீது போர் தொடுத்தது. அந்தப்போர்ப்புழுதியிலே மறைந்து புறமுதுகுகாட்டி ஓடியது வெள்ளையர்படை. வெற்றி நடை போட்டது ஜப்பான்.

1945 மார்ச்சில் ரங்கூன் நகரம் ஜப்பானியர்களின் கைக்கு வந்தது.

1943 ஆகஸ்டில் ஜப்பானியர் பர்மாவுக்கு சுதந்திரம் தந்தனர். பர்மியர்கள் அந்தச்சொபிதவார்த்தையை உச்சரிக்கத் தொடங்குவதற்குள், தோற்றுப்போய் ஓடிய வெள்ளையர் தொடை தட்டிக் கிளம்பினர். பர்மாவைப் பற்றினர். மீண்டும் தங்கள் கொடியை உயர்த்தினர். ஆம்!

1945 மே மாதத்தில் பர்மா மீண்டும் வெள்ளையரின் விழிக்கு விருந்தாயிற்று. விலங்கு பூட்டப்பட்டது பர்மாவுக்கு. சுதந்திரத்தைச் சுவைத்திடத் துடித்த பர்மியர் சூறுவளியாய்க்கிளம்பினர். கொலை நிகழ்ந்தது! கொள்ளை அதிகரித்தது. அரசாங்க ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதுமட்டுமல்ல. போலீஸ்காரர்கள் உள்பட வேலை நிறுத்தம் செய்தனர். ஆட்சியாளர் நடுங்கினர். ஆபத்து நெருங்குகிறது என்பதை உணர்ந்தனர்.

ஆகவே 1949 செப்டம்பரில் அவுங்சானை உதவித் தலைவராகக் கொண்ட இடைக்கால சர்க்கார் ஏற்படுத்தப்பட்டது. அவுங்சான் உதவித் தலைவராக வந்த பிறகு தான் மக்கள் உள்ளத்தில் வீசிக் கொண்டிருந்த புயல் ஓரளவுக்கு அடங்கி அமைதிக்கான சூழ்நிலை உருவாயிற்று.

அயராத உழைப்பின் சின்னமாய் — அழியாத கொள்கையின் பிறப்பிடமாய் — அஞ்சாத நெஞ்சுறுதியும் ஆதிக்கத்திற்கு வணங்காத வலிமையும் பெற்றவராய் விளங்கும் அவுங்சானை அன்று பாராட்டாதவர் இல்லை.

"அவுங்சானின் இனப்பற்றைப் பாராட்டுகிறேன். அவர் எண்ணம் வெற்றியடைய — பர்மா சுதந்திரமடைய நாம் பிரார்த்திப்போமாக!" என்றார் அன்று 'பதவி சூடா' மன்னராக இருந்த பண்டிதர் நேரு. எந்தப் பண்டிதர் 'நாட்டுப் பிரிவினை கூடாது' அது நாச சக்தியை வளர்க்கும். 'நலிவைப் பெருக்கும்' என்று இந்தியாவின் நாற்திசைக்கும் சென்று நாற்றத்தைக் கிளப்புகிறாரோ அதே பண்டித நேருதான் அன்று அவுங்சானின் போக்கை 'நான் சென்ஸ்' என்று சொல்லவில்லை அவர் நாக்கு 'நல்லதோர் செயல்! நாமெல்லாம் பர்மா சுதந்திரமடையப்பிரார்த்திப்போம்' என்று வாழ்த்தியிருக்கிறார்! வரவேற்றிருக்கிறார்.

'பர்மா பர்மியருக்கே! — இது அவுங்சான் முழக்கமட்டுமல்ல! பர்மியர்களின் உரிமைப் பண். இதைப் பாராட்டியிருக்கிறார் பண்டிதர். பர்மா சிறப்புற்று வாழப் பரவசத்தோடு வாழ்த்தியிருக்கிறார்.

'திராவிடநாடு திராவிடருக்கே!' —இது தென்னகத்தின் சிம்மக் குரல்! பண்டிதர் சீறுகிறார்! 'பைத்தியக்காரச் செயல்' என்று கூறுகிறார்.

1947ம் ஆண்டு பிறந்தது. பர்மா பர்மியருக்காக வேண்டும் என்ற பழுதுபடா இலட்சியத்தைச் சுமந்துகொண்டு பர்மிய தூதுகோஷ்டி ஒன்று இலண்டன் நோக்கிப் புறப்பட்டது. அந்தத் தூதுகோஷ்டிக்குத் தூணாக இருந்தவர் அவுங்சான். பிரிட்டிஷாரின் நிழலாக இருந்துவந்த பெதிக் லாரன்ஸ், அட்லி, ஸ்டாப்போர்டு கிரிப்ஸ், ஏ. வி. அலெக்சாண்டர் ஆகியோரைப் பர்மிய தூதுக் கோஷ்டி சந்தித்தது.

ஆதிக்கவாதிகளும் அறப்போர்க் காளைகளும் நேருக்கு நேர் அமர்ந்தனர். பர்மியரின் இதயவயலில் ஆழப்பதிந்து முளைத்து வேர்விட்டிருக்கும் இலட்சியப் பயிரின் செழுமையை — அது விளைந்தால் நாளைய சுதந்திர பர்மியர்களுக்கு கிடைக்கும் பலனை—விரிவாக—நயம்பட—துணிவுடன் எடுத்துச் சொல்லி வாதாடினார் அவுங்சான்.

'நான் ஒரு தேசியவாதி. அரசியல் உலகில் அநாவசியமாக நுழைந்து குழப்பவேண்டும் என்ற ஆசை கிடையாது எனக்கு. எங்கள் நாட்டைத்தான் நாங்கள் கேட்கிறோம். பர்மா விடுதலை பெற்றால்—சுதந்திர பூமியானால்—வஞ்சித்த பிரிட்டனுடன் பகைமை கொள்ளும், பாதகம்புரியும் என்ற துவேச எண்ணத்திற்கு உங்கள் இதயத்தைத் தந்துவிடாதீர்கள். எப்பொழுதும் நேசக்கரம் நீட்டப் பர்மா நிச்சயம் காத்திருக்கும்!'' என்றார் அவுங்சான்.

இணையாத துருவங்கள் இணைந்தன. ஒப்பந்தத்தில் கையெழுத்தைப் பதித்தன. வளையாத பிரிட்டிஷ் வல்லூறு, அணையாத கொள்கையினரின் முன் வணங்கியது. அடையாத விடுதலைச் செல்வத்தை பர்மா அடைந்தது—மகிழ்ந்தது!

1947 ஜுன் எட்டு! பர்மா நாட்டின் கரத்தில் பூட்டப்பட்ட விலங்கு ஒடிக்கப்பட்ட நாள்! சுதந்திர எழுத்துப் பொறிக்கப்பட்ட நாள்!

சுதந்திர பர்மாவில் முதலாவது அரசியல் நிர்ணயசபை கூடியது. அவுங்சான் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். புன்னகை முகத்திலே தவழப் பர்மாவுக்குப் புதுப்பாதை வகுத்துத் தந்த புத்துலகச் சிற்பி அவுங்சான் புறப்பட்டார் புதிய அரசியல் நிர்ணயசபைக்கு. அப்பொழுது அவரைச் சந்தித்த ஒருவன் கேட்டான்.

"உங்கள் இலட்சியம் ஈடேறி விட்டதல்லவா?!'

அவன் பேச்சிலே கேலி பொதிந்திருப்பதையும், முகத்திலே ஏளனத்தின் நிழல் படிந்திருப்பதையும் அந்த மாவீரன் உணரவில்லை — பார்க்கவில்லை! பரவியிருந்த இருளைத் தன் தூய அணியால் பறந்தோடச்செய்த அந்தப் பகலவன் பதில் சொன்னான் அவனுக்கு—அந்தப் பாதி மதியினனுக்கு!

"என்னுடைய இலட்சியப் பயணம் இன்னும்முடிவடையவில்லை. சுதந்திர பர்மாவோடு என் இலட்சியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக யாரும் எண்ணவேண்டாம். பர்மாவை குடியரசாக்கவேண்டும். அதுதான் என் கொள்கை!''

அரசியல் நிர்ணய அவையில் அமர்ந்தார். அவர் இதயத்தில் பலப்பல எண்ணங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. பர்மாவின் எதிர்கால வாழ்வைப்பற்றிய கருத்துக்கள் அவர் மனத்தில் பூத்துக்கொண்டிருந்தபோது—

இதயச் செடியைப் பறித்துக் கசக்கி எறிந்தது எங்கிருந்தோ புறப்பட்டுவந்த துப்பாக்கிக் குண்டுகள்! முன்னாள் பர்மாவின் முதலமைச்சரான 'ஊசோ'வின் ஆட்களால் கொல்லப்பட்டார். மூடியைத் திறந்துவிட்ட தண்ணீர்க் குழாயைப்போல இரத்தம் பொழியத் துடிதுடித்து இறந்தார் அவுங்சான்—விடுதலைவிரும்பி!

நீக்ரோக்களை மிருகங்களாக நடத்தப்படும் நிலையைக் கண்டார் லிங்கன்! நெஞ்சுருகினார்! அவர்களை அடிமைக் குழியிலிருந்து தூக்கிவிட்டு ஆளாக்கி அவனியின் பார்வையைத் தன்பக்கம் விழும்படி செய்தார். அமெரிக்காவின் 'கோட்சேக்கள்' அந்த விடுதலை விரும்பியின் குருதியைச் சுவைத்தனர். ஏகாதிபத்தியத்தின் இருப்பிடமாம் வெள்ளையரின் இரும்புப் பிடியிலிருந்து இந்திய உபகண்டத்தை மீட்டிடப் பாடுபட்டார் காந்தி. அவருடைய இரத்தத்தை நுங்குக் காயைப் போல குண்டுகளால் தோண்டியெடுத்துச்சுவைபார்த்துப்பசியை அடக்கிக் கொண்டான் கோட்சே! அதுபோல பர்மாவின் 'கோட்சேக்கள் அவுங்சானின் இதயத்தை சுக்குநூறாகப் பிய்த்தெறிந்து, அந்தக் கோரக் காட்சியைக் கண்டு கைதட்டி வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொண்டனர்.

நாட்டை மீட்டிட—நலிவை ஒட்டிட—நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கத் திட்டம் தீட்டிடப் பாடுபட்ட வீரர்களின் வரலாற்றிலே உள்ள கடைசி அத்தியாயம் சிவப்பு மையினால்தான் எழுதப்பட்டிருக்கிறது.

நபிநாயகம்—இயேசு—சாக்ரடீஸ்—கலிலியோ இவர்களெல்லாம் யார்......? சமுதாயக் குளத்தில் வளர்ந்து அடர்ந்து படர்ந்திருக்கும் பழைமைப்பாசிதனைவேரோடு களைந்திடப் புறப்பட்டவர்கள். முடிவில் பழைமை வெறிக்குப் பலியானார்கள்.

கோட்சே குணத்தினரே! கொடும் மனத்தினரே! நீங்கள் திருந்தி நல்வாழ்வுக்குவழிகோலிய—கோலும் நல்லவர்களை இனியேனும் நாடாதிருப்பீர்களா? ❋


# தையற்கலை

(திங்கள் இதழ்)

ஆசிரியர்: K. P. சுந்தரம்

★ ஆரம்பத் தொழிற் பயிற்சி
★ உடையின் வளர்ச்சியும் வரலாறும்
★ உடையும் ஒழுக்கமும்
★ ஊரும் உடையும்
★ கலைப் பொழில்
★ சித்திரத் தையல்
★ மகளிர் மன்றம்.

பற்றி எழுதப்படும் கட்டுரைகளுடன் மேத்திங்கள் முதல் ஒவ்வொரு திங்கள் முதல் நாளும் வெளிவரும்.

தனிப் பிரதி 20 காசு ஆண்டுச் சந்தா ரூ. 2-50

வெளிநாடு ஆண்டுச் சந்தா ரூ. 3-50

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

"தையற்கலை" 132, புரசை நெடுஞ்சாலை, சென்னை-7.

# பிச்சைக்காரி!

—[மா. கி. த.]—

நண்பரைத் தேடிக்கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர் இன்னும் எழவில்லை என்று சொன்னார்கள். கையிலிருந்த நாளிதழைப் பிரித்துப் பக்கம் பக்கமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். அது அந்த இதழின் பொங்கல் மலர் போலும்! இலக்கியக் கட்டுரைகளும், துணுக்குகளும், செய்திப் படங்களுமாக இரண்டொரு பக்கங்கள் இருந்தன.

தள்ளுவண்டியைத் தள்ளியவாறு நண்பருடைய மகன்—சிறுவன் குறுகுறுவென வந்தான். எனக்கு அந்த நண்பர் அறிமுகம் ஆன அளவு அவருடைய இல்லத்தார் அறிமுகம் இல்லை. ஏன்? தெரியாது என்றே சொல்லிவிடலாம். அதனால் அவன் பெயரும் எனக்குத் தெரியாது. ஆனால் அவனைக் கண்டவுடனே அவனிடம் ஏதாவது பேசவேண்டும் என்று எண்ணம் எழுந்தது. குழந்தைகளைக் கண்டால் எனக்குக் கொள்ளை ஆசை என்று நான் கதை அளக்கவில்லை. என்னவோ அவனிடம் அந்த அளவு கவர்ச்சி இருந்தது; அவ்வளவுதான்.

அலை அலையாகச் சுருண்டு அலைந்த மயிர், குறுகுறுத்த கண்கள், மெழுகுப் பொம்மைபோன்ற உடல் — இப்படி ஒரு குழந்தையைக் கண்டால் நீங்கள் மட்டும் என்ன விட்டுவிடுவீர்களா?

அவனை அருகிலே வருமாறு சாடை காட்டினேன். தயங்கித் தயங்கி வந்தான்.

"உன் பேர் என்ன?" என்று கேட்டேன்.

"எயிலன்" என்றான்

"என்ன?" விளங்காமல் கேட்டேன். அவன் மறுமுறையும் அதையே சொன்னான். 'எழிலன்' என்று உண்மைப் பெயரைத் தெரிந்து சொன்னேன். அவன் முகத்தில் சிரிப்புப் பிறந்தது. எங்கிருந்தோ ஒரு பிச்சைக்காரி வந்தாள்.

"அம்மா" என்று அலறினாள்.

'பார்க்கப்போனால், நானும் பிச்சைக்காரன்தானே, நான் [illegible]தவன், ஆனதினால் நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். நாகரிகம் தெரிந்ததால் வரும்போது காணலாம் என்று காத்திருந்தேன். அவளுக்கோ அவசரம்! எத்தனை வீடுகளைக் காணவேண்டும் இனி. ஆகையினால் வரும்போது வரட்டும் என்று வாய்மூடிக் கிடக்காமல் மறுமுறையும் "அம்மா" என்று அழைத்தாள். 'அம்மா' எங்கோ அடுப்படியில் இருந்தார்கள்.

அதனால் எழிலனை "என்ன?" "என்ன?" என்றான்.

"அரிசி, வேணும் கண்ணு' என்று அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

அந்தச் சிறுவன் என்ன நினைத்தானோ! "அரிசியா வேண்டும்?" என்று திரும்பக் கேட்டான்.

"ஆமாம்" என்றாள் அவள்.

"ஏன் உங்க வீட்டிலே இல்லையா?" என்கிறான் அவன். அவள் வாயால் விடைசொல்லாமல், உதட்டை மடித்து இல்லை என்றாள்.

எழிலன் விரைந்து உள்ளே சென்றான். ஒரு பிடி அரிசியைக் கொண்டுவந்து நீட்டினான்.

யானை எதிர்பார்த்தவனுக்குப் பூனை கிடைத்த கிலே. சிறுவன் கைக்குள் எவ்வளவு சிக்கும்?

ஏமாற்றம் கலந்த குரலில் அவள் 'குவளையில் கொண்டுவா கண்ணு' என்றாள்.

சிறுவன் உள்ளே சென்று ஒரு சின்னக் குவளையில் முக்கால் பகுதிக்குமேல் அரிசி கொண்டு வந்து நீட்டினான்.

அவள் மடியைக் காட்டிப் பெற்றுக் கொண்டாள்.

அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்த எழிலன், அவள் தெருவை அடைந்ததும் "ஓரமாகப்போ—கார்—வரும்" என்று அவனால் முடிந்த அளவு உரக்கச்சொன்னான்.

இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த என் கண்கள் பனித்தன.

ஒரு கணம்தான்!

"அடே இங்கே வாடா" என்று ஒரு அம்மையார் உள்ளே இருந்து வந்தார். வந்தவர் என்னைக் கண்டதும் இரண்டடி பின்னுக்குச் சென்று, கதவின்மறைவில் நின்றுகொண்டு அவனை 'வா' என்று அழைத்தார்கள். அவன் ஓடிப் போனான்.

அவன் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு சென்றார்கள்.

சற்று நேரத்தில் உள்ளே இருந்து அந்தச் சிறுவன் அலறி அழும் ஓசை கேட்டது. உற்றுக் கேட்டேன். அவனை அழைத்துச் சென்ற அம்மையாரின் 'வாழ்த்து'ம் இடை இடையே வந்தது.

'சனியனே, ஒருத்தவளை அரிசியா கொண்டுபோய்க்கொட்டுவார்கள்! இனிச் செய்வாயா, செய்வாயா— தோலை உரித்துவிடுவேன். சனியன்' என்று அவனை அடித்து அழவைத்தார்கள்.

பிடி தளர்ந்ததும் தெருவுக்கு ஓடிவந்த சிறுவன் ஓரமாகப்போய் நின்றுகொண்டு தேம்பித் தேம்பி அழுதான்.

அருகில் வருமாறு அழைத்தேன்.

"வரமாத்தேன் போ" என்றான்.

இதற்குள் நண்பர் எழுந்து வந்து என்னைக்கண்டார். பேச்சின் இடையே அந்தச் சிறுவனைப் பற்றியும் பேசினோம். அவன் செய்ததைச் சொல்லி "அந்தப் பிச்சைக்காரியைப் பார்க்க அங்கே நிற்கிறான் பாருங்கள்" என்றார்.

'ஐயோ பாவம், பிச்சைக்காரியை வெளியில் ஏன் தேடுகின்றான்?' என்று நினைத்துக்கொண்டேன், சொல்லமுடியுமா?

★

# வீராங்கனை--வெர்சாரி ஐரிஸ்

சென்ற இதழ் தொடர்ச்சி...

பிராங்கோ ரோஸி என்ற பதினேழு வயது நிரம்பிய இளைஞனைத் தவிர அனைவரிடமும் அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

அந்தச்சிறுவனின் குறுகுறுத்த கண்கள் அவளை என்னவோ செய்தது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் தன் சகோதரன் பெர்ட்டோவின் நினைவுதான் வரும் அவளுக்கு.

கடைசியாக வந்த பாராக்காரனால் ஐரிஸின் நினைவுகள் கலைந்தன. அவள் எழுந்து 'சூப்'பைச் சுடவைப்பதற்கு உள்ளே சென்றாள்.

'சேதி ஏதாவது உண்டா'—சில்வியோ வினவினான்.

"திடுக்கிடும்படி ஒன்றுமில்லை. வீதிகளில் படையொன்றும் காணப்படவில்லை. ஒட்டலில் ரேடியோ செய்தியொன்று கேட்டோம். நேற்று இரவு சிறைச்சாலைக்கு வெடிவைக்கப்பட்டதாம்" — என்று பாராக்காரன் கூறிக்கொண்டிருந்தபோது ஐரிஸ், 'சூப்'புடன் வந்தாள்.

"ஏய் முட்டாள்! சூப் ஒழுகுவதைப் பார்!"

ஆம். ஐரிஸின் கரங்கள் நடுங்கியதால், கோப்பையிலிருந்து சிதறி விழுந்த சூப் அவர்கள் கால்சட்டைமீது விழுந்தது.

அவள், சில்வியோவை உற்று நோக்கினாள்.

அவள் பார்வையில் அச்சம் குடிகொண்டிருந்தது. அவளின் பயங்கரத்தனிமையைச் சில்வியோவால் நன்கு உணரமுடிந்தது.

அடுப்பின் பக்கமாகத் திரும்பிக் கொண்டாள் ஐரிஸ், முட்டிவரும் கண்ணீரை மறைப்பதற்கு.

சில்வியோ நிதானமாகக் கூறினான். "சரி, போய்ப் படுத்துத் தூங்கு, ஐரிஸ்."

"என் நிலையினை அவரும் உணரவில்லையே! எல்லோரையும் போலத்தானே இருக்கின்றார், இவரும்! அவர் உள்ளத்துள் ஒன்றுமில்லை — ஒன்றுமேயில்லை" என்று எண்ணியவாறே அறையை விட்டு அகன்றாள்.

கதவு சாத்தப்பட்டதும், பிராங்கோ கூறினான். "ஏன் தான் அவளை இங்கு தங்கவைக்கிறாயோ புரியவில்லை"

சுகுணு

சில்வியோவின் பதிலில் கோபம் நிறைந்திருந்தது.

"ஏன்! உங்கள் அனைவரைக் காட்டிலும் அவளிடமுள்ள தைரியம்! மற்றும் அவள் குடும்பமே சிறைபட்டிருப்பதால்!"

மறுநாள் விடியற்காலை மூன்று மணிக்கு, ஐரிஸ், சில்வியோ மற்றும் நால்வரும் சவாரி சென்றனர்.

சில்வியோ, அமைதியாக இருந்தான். ஐரிஸைப்பற்றிய கவலை தான். அவள் உள்ளத்து வேதனையினை நன்கு உணர்ந்தும், அவளுக்கு ஆறுதல் கூறமுடியாத நிலையில் இருந்தான் சில்வியோ.

காரணம் ஆறுதல் கூறக்கூற அவர்களின் உறவு பலப்பட்டு விடும். அதனை எப்படியும் தவிர்த்தே ஆகவேண்டும்!

## —[ 3 ]—

## வீரத்துடன் வளர்ந்தது காதல்:

மௌனத்துடன் சென்று கொண்டிருந்தனர். குதிரைகளின் குளம்புச் சத்தத்தைத் தவிர வேறு எவ்வித சத்தமும் இல்லை.

"எங்கு போகின்றோம்? எதற்குப் போகின்றோம்"-ஐரிஸ் கேட்டாள்.

"குடிப்பதற்கு"- சில்வியோவின் பதில் இது.

மதுச்சாலை ஒன்றை அடைந்தனர். ஐரிஸை வெளியே நிறுத்தி விட்டு, சில்வியோ மட்டும் உள்ளே சென்றான். மதுவை வரவழைத்தான். சில்வியோவை அனைவரும் தெரிந்துகொண்டனர். திடீரென அமைதி சூழ்ந்தது, மதுச்சாலையில்.

சில வினாடிகளுக்கெல்லாம், இராணுவ அதிகாரி ஒருவர் அவனைத் தாண்டிக்கொண்டு, உள்ளே நுழைந்ததைக் கண்டதும் அவள் உடல் அசைவற்றுவிட்டது.

"எங்கே சில்வியோ?"

இரண்டு கரங்களிலும் கைத் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு, "கரங்களைத் தூக்கிவிடு, இல்லையேல் சுட்டுவிடுவேன்" என்றான் சில்வியோ.

அதிகாரியோ கொஞ்சமும் நகரவில்லை.

"உன்னை நான் சுட விரும்பவில்லை; பணிந்துவிடு" என்றான் சில்வியோ.

இந்த நேரத்தில்தான் யாரும் பார்க்காத ஒன்றைப் பார்த்து விட்டாள் ஐரிஸ், வெளியே நின்றிருந்த காரணத்தால். அதிகாரியின் கால்களுக்குப்பின்னால், முது

குப் புறத்தில் பெரிய சுழல் துப்பாக்கி ஒன்று இருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் திடீரெனச் சுட்டும் விடலாம்.

"அவன் முதுகில் சுழல் துப்பாக்கி உள்ளது" என்று கத்தி விட்டாள் ஐரிஸ்.

கத்திக்கொண்டேயிருக்கும் போது, அதிகாரியின் துப்பாக்கியினின்றும் படபடவெனக் குண்டுகள் வெடித்தன. நல்ல வேளை! ஐரிஸின் முன் எச்சரிக்கையினால் சில்வியோ ஒதுங்கிவிட்டான். துப்பாக்கி ரவைகள் சில்வியோவின் உடலில் பாயவில்லை.

மதுச்சாலைபூராவும் ஒரே இரைச்சல்; படையொன்று உள்ளே நுழைந்துவிட்டது; கரங்களில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு குன்றுகளை நோக்கி விரைந்தனர், இருவரும் ஓடிஓடிக் குன்றை அடைந்துவிட்டனர்.

அனைவரின் பார்வையினின்றும் தப்பித்துவிட்டனர்.

"அடிபட்டுவிட்டதா ஐரிஸ்"

"உம்—இல்லை"

மௌனமாகச் சென்றனர் இருவரும்.

சில்வியோவின் உள்ளத்தில் எண்ண அலைகள் புரண்டெழுந்தன. தன் உயிரைக் காப்பாற்றியவள் ஐரிஸ் என்ற நினைவு மேலோங்கி நின்றது.

"என்னைச் சுடப்போகிறான் என்பதை எப்படியோ பார்த்துவிட்டாளே? அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேனே தவிர, அவன் பின்புறத்தைக் கவனிக்காமல் போய்விட்டேனே நான்!

நெடுநேரம்வரை, தான் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டதன் நினைவே இருந்தது.

வீட்டை அடைந்தபின்தான் ஐரிஸின் கண்களில் அயர்வையும் உடலில் வீக்கத்தையும் கண்டான்.

அவளைத் தாங்கிய வண்ணம் வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்.

"வீராங்கனையாக மாற முயல்கின்றாயா, ஐரிஸ்!"

"இல்லை — மனிதனாக இருக்க முயற்சிக்கிறேன்"

"சரி போய்ப் படுத்துக்கொள்"

படுக்கைக்குச் சென்றுவிட்டாள் ஐரிஸ்.

'என்ன நடந்தது' என்று சிலர் கேட்டனர் சில்வியோவை.

"தன் உடலை வீங்கவைத்துக்கொண்டு என் உயிரைக் காப்பாற்றினாள் ஐரிஸ்" என்று பெருமிதத்துடன் கூறினான்.

இச்செய்தி கூடாரம் பூராவும் பரவிவிட்டது. ஐரிஸ் தலையை வெளியே காட்டவில்லை. படுத்தபடி எதையோ யோசித்த வண்ணமிருந்தாள்.

சிலர் அவளைப் பார்த்து நன்றி கூறினர்.

உணவருந்தும்போது கூட அவள் செய்த வீரச் செயலைப்பற்றித்தான் எண்ணிக்கொண்டிருந்தான். 'அவளின் தேவைகளைக் கவனிக்கவேண்டும்" என்று எண்ணியவாறு விளக்கொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு அவள் இருக்கும் அறைக்குச் சென்றான். அந்த அறையில் வெளிச்சம் துளியும் தெரியாதிருக்கவே தூங்கிவிட்டிருப்பாள் என்று எண்ணினான். பிறகு கதவைத் தட்டினான்.

தன் போர்வையை விலக்கிய வண்ணம் 'என்ன வேண்டும்' என்று பரபரப்புடன் கேட்டாள்.

"உனக்கு ஏதாவது தேவை உண்டா என்று தெரிந்துபோகவும், நன்றி கூறவும் வந்தேன்"

"நான் நலம்தான். அந்த நேரத்தில், அந்தச் சூழ்நிலையில் யாரும் செய்யக்கூடிய செயலினைத்தான் செய்தேன் நானும்"

விளக்கைச் சிறிதாக்கிவிட்டு அவள் முன் போய் நின்றான். ஐரிஸ் அசையவில்லை.

"ஐரிஸ்... அவன் என்னைச் சுடுவான் என்பதை எப்படி உணர்ந்தாய்?"

"அவன் தோள்கள் அசைவதைக் கண்டேன்"

சில்வியோ, படுக்கையின் ஓரத்தில் அமர்ந்துகொண்டான்.

அவள் கூந்தலின்மீது விளக்கொளிபரவி இருந்தது. அவள் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. ஆனால் அவள் கண்கள் அமைதியுடனும், தோல்வியை ஒப்புக்கொண்டதாகவும் இருந்தது.

"நான் அமைதியாகத் தூங்க வேண்டும். செல்வாயா நீ"

பதிலுக்கு அவன், அவளை அணைத்தவாறு முதன் முறையாக அவள் அழகினை உற்று நோக்கினான்.

இருவரின் உதடுகள் ஒன்று சேரும்போது, கண்கள் நான்கும் ஒன்று கலந்து காதல் கதை பேசின.

"இப்போது நீ அமைதியாகத் தூங்கலாம்" எனக் கூறிவிட்டு விளக்கை எடுத்துக்கொண்டு திரும்பிவிட்டான்.

ஓர் புதிய வாழ்க்கை, நம்பிக்கை, தைரியம் யாவும் அவள் நரம்புகளில் பாய்ந்து இனிய நாதமெழுப்பின.

கொள்கைக்காக இருவரும் போராடுவர். யாவும் முடிந்தபின்னர் அவர்களுக்கென ஓர் தனி வாழ்க்கை—ஒன்றான வாழ்க்கை, அவர்களுக்கெனத் தனி வீடு, அவர்களுக்குக் குழந்தைகள்...... அப்பப்பா!

அவள் இதயம் இன்பத்தால் நிரம்பி வழிந்தது.

காலைக்கதிரவன் உதயமானதும் கண் விழித்தாள் ஐரிஸ். முட்டியின் வீக்கம்மட்டும்குறையவில்லை. இருப்பினும், சமையல் அறைக்குச் சென்றாள். அவள் இதயமோ மகிழ்ச்சிக் கீதம் இசைத்துக் கொண்டிருந்தது.

அறை இருட்டாகவே இருந்தது. சாளரத்தைத் திறந்துவிட்டுத் திரும்பியதும், தலையின் மீது கைகளை வைத்தவண்ணம் தூங்கிக் கொண்டிருக்கும் சில்வியோவைப் பார்த்தாள். முதலில் அவனை எழுப்ப எண்ணினாள். பிறகு அது சரியல்ல என்று சும்மா இருந்துவிட்டாள்.

சந்தேகம்—பெண்களின் உடன் பிறந்த வியாதியா! ஐரிஸின் உள்ளத்தைச் சந்தேகம் சூழ்ந்தது. தான் செய்த உதவியின்பால் ஏற்பட்ட மகிழ்ச்சி மிகுதியால், முன் இரவு சில்வியோ அப்படி நடந்துகொண்டானே தவிர, உண்மையில் சில்வியோ தன்னைக் காதலிக்கின்றானா?

விறகை வைத்து அடுப்பைப் பற்றவைத்த பிறகும், எண்ணங்கள் வயப்பட்டிருந்தாளே தவிர, சில்வியோ எழுந்துவந்து அவள் அருகில் நின்றிருந்ததைக்கூட கவனிக்கவில்லை.

திடீரென ஆண்மைக் கரங்கள் இரண்டு அவளைப்பற்றித் திருப்பியதும் அவள் உள்ளம் வேகமாக அடித்துக்கொண்டது.

"உன்னை நான் எழுந்திருக்கச் சொல்லவில்லையே! எங்கே, அந்த முட்டி வீக்கத்தைக் காண்பி."

கண்ணீர் வேகமாக ஓடிவந்தது. அவனைத் தவருக எண்ணிவிட்டாளே! திடீரென அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்ட சில்வியோவின் உள்ளம் மிக்க துயருற்றது

அவளை அருகில் அழைத்து அவன் முகத்தை அவள்மீது புதைத்துக்கொண்டான்.

'ஐரிஸ்! மன்னிக்கவும்... நான்... நான்...'' சொற்கள் தடுமாறின.

அவள் கண்களை, கழுத்தை, முகத்தை மாறி மாறி முத்தமிட்டான் சில்வியோ.

''நான் உன்னைக்காதலிக்கிறேன் ஐரிஸ்—என்னை நம்பு, நம்பு'...''

காலம் நகராதிருந்தது-உலகமே அவர்களுடையதாக இருந்தது. அவ்வையத்தில் போர் இல்லை, படையில்லை — கடக்கவேண்டிய துன்பங்கள் எதுவும் இல்லை.

வேகமான காலடிச் சத்தம் அவர்களை இந்த உலகத்திற்கு அழைத்துவந்தது. உடனே இருவரும் விலகிக்கொண்டனர்.

மிகுதி நாட்கள் பூராவும் இருவரும் ஒன்ருக இருக்கச்சந்தர்ப்பங்கள் அவ்வளவாகக் கிடைக்கவில்லை.

நாஜிகளின் துருப்புக்கள் தெற்குப் பக்கம் முன்னேறிக்கொண்டிருந்தன. மலை பூராவும் பனி சூழ்ந்திருந்தது.

இரவில் திட்டங்கள் தயாராயின. ஆட்கள் சுறு சுறுப்பாக இருந்தனர். படையும் கருவிகளும் மாற்றலாகவேண்டும்.

அன்று இரவு நெடுநேரம் கழித்து இருவரும் தனிமையில் சந்தித்தனர். எதிரெதிராக உட்கார்ந்து கொண்டனர்.

சில்வியோ சிகரெட் ஒன்று பற்றவைத்துக்கொண்டு, போர் முகத்தில் தனக்கேற்பட்ட பழைய சம்பவங்களைக்கூறிக்கொண்டிருந்தான். அரசியல் புகுந்துவிட்ட காரணத்தால், ஒன்றும்தெரியாத தன்னைக் கொலைகாரன் எனக்குற்றம் சாட்டியதையும் அதனின்றும் தான் தப்பிவிட்டு வந்ததையும் விவரித்தான்.

ஐரிஸ் ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

—[ 4 ]—

## வீரம் வென்றது! வஞ்சம் வளர்ந்தது!!

சில்வியோவையும், அவன் ஆட்களையும் எப்படியும் பிடித்துவிடவேண்டும் என்று, நகரம் முழுதும் இராணுவத்தினரின் காவல் பலமாக இருந்தது. நகரத்து மக்கள் சில்வியோ எப்படியும் தப்பிவிடவேண்டும், சில்வியோவிற்கு எவ்வித ஆபத்தும் நேரக்கூடாது என வேண்டிக்கொண்டனர்.

வயதான ஓர் குடியானவனைப் போன்றுவேடமணிந்து கொழுத்த பன்றியொன்றை இழுத்துக்கொண்டு கையில் ஓர் கம்புடன், நகரத்துள் நுழைந்தான் சில்வியோ.

இராணுவஉடை அணிந்திருந்த காவலாளிகளிடம் சென்று, ''குழந்தைகளே, இந்தப் பன்றிகளைக் கொஞ்சம் பார்த்துக்கொள்கின்றீர்களா? உள்ளே கடைவரை சென்றுவிட்டுத்திரும்பவேண்டும். இந்த எதிரிகளின் பயம் சொல்லத் தரமில்லை'' என்று இழுத்த வண்ணம் கூறினான்.

காவலாளிகள் சிரித்தவண்ணம் ''ஆபத்து எதுவும் வராமல் பார்த்துக் கொள்கிறோம். போய்விட்டு வா'' என்றனர்.

திரும்பும்போது பன்றிகளை பெற்றுக்கொண்டு நகரத்து எல்லையைத் தாண்டி வெளியேறிவிட்டான் சில்வியோ.

நுழைவு வாயிலில் ஓர் அறிவிப்பும் எழுதிவிட்டுச் சென்றான்.

படைத் தலைவருக்கு!

உன்னுடைய ஆட்கள் என் பன்றிகளைப் பாதுகாக்க மட்டுமே தகுதி உள்ளவர்கள்.

—சில்வியோ சார்பாரி.

இராணுவத்தினரின் கோபம் அளவிற்கு மீறியது. சூழ்ச்சியைக் கையாண்டாலொழிய வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்தனர்

வாலன்டினோ கிராமத்திற்குச் சில்வியோ திரும்பியபோது, வீட்டில் ஐரிஸ் இல்லை.

ஒரு மணி நேரத்திற்கு முன்பு யாருடனோ சென்றதாயும், அப்போது அவள் முகம் ஏதோ பயங்கர உருவத்தைக்கண்டு பயந்தது போல் காணப்பட்டதாகவும் கூறினர்.

நண்பன் ஒருவன் மூலம், தன் தம்பி, தங்கைகளைக் காணச் சென்றிருந்தாள் ஐரிஸ்.

ஓர் குடியானவர் வீட்டில் அடைந்து கிடந்தனர் அச் சிறுவர்கள்.

மூன்று சிறுவர்களும் மிகவும் இளைத்துப்போய், கிழிந்த ஆடைகள் அணிந்து அழுதவண்ணம் ஐரிஸிடம் ஓடிவந்தனர்.

மூவரையும் கட்டியணைத்துக் கொண்டு அழுதவண்ணம் முத்தம் கொடுத்தாள் ஐரிஸ்.

மூத்த தம்பி பெர்ட்டோவிற்குத் தான் முதலில் பேசும் நிலை ஏற்பட்டது.

''அம்மாவையும் அப்பாவையும் தண்டனை விதித்து ஜெர்மனிக்கு அனுப்பிவிட்டு எங்களை விட்டு விட்டனர். எங்கு போவதென்று தெரியவில்லை — நீயோ இறந்துவிட்டதாகக் கூறினர். பெனடெட்டோவிற்குச் சென்று சித்தப்பாவிடம் தங்கிவிடலாம் என்று இவ்வழியே வந்தோம் — இந்த வீட்டிலுள்ள அம்மாள் எங்களுக்கு உணவளித்து இங்கே தங்கும்படி கூறினர்.''

''ஐரிஸ் உன் உடைகள் விநோதமாக இருக்கிறதே'' என்ருள் சிறிய தங்கை.

ஐரிஸ் சிரித்தாள். ''நான் சில்வியோ படையில் சேர்ந்து போர் புரிகின்றேன்'' என்ருள்.

''நாங்களும் உன்னுடன் வந்துவிடவா?''

குழந்தைகளைப் பிரியவும் ஐரிஸால் முடியவில்லை. கூடாரத்திற்கு அழைத்துச் செல்வதும் இயலாத காரியம்—ஒன்றும் புரியாத நிலையில், அங்குள்ள அன்பு நிறைந்த குடியான மக்களிடம் கெஞ்சி, குழந்தைகளைத் தற்காலிகமாகக் கவனித்துக் கொள்ளுமாறு வேண்டினுள்.

அழுகையை அடக்கிக்கொண்டு, எவ்வளவு சீக்கிரம் மீண்டும் வர முடியுமோ அவ்வளவு விரைவில் வந்து பார்ப்பதாகக் கூறிவிட்டுத் திரும்பினுள் ஐரிஸ்.

திரும்பி வீடு சேருவதற்குள் மிகவும் இருட்டிவிட்டது. சில்வியோ மிக்க உணர்ச்சி வயப்பட்டவனுக இருந்தான். அந்த உணர்வும் பயத்தால் ஏற்பட்டதே தவிர, கோபத்தால் அல்ல. ஐரிஸ் நலமுடன் திரும்பவேண்டுமே என்ற பயம்.

ஐரிஸ் மூலம் நடந்தவற்றை அறிந்து மிக்க வேதனையுற்ருன் சில்வியோ. வாய் அடைத்துவிட்டது. நெஞ்சு வலித்தது—தன்னுடைய உதவியற்ற நிலைமை எண்ணி நொந்தான்.

[அடுத்த இதழில் முடியும்.]

# திரட்டு

கண்டகர்ணன், ஒரு அசுரன். ஆண்டவன் பெயரைக் கேட்கப் பொறுக்காமல், மணிஒன்றைக் காதுகளில் கட்டிக்கொண்டவன். சிறுவர், சிறுமியர்களுக்குச் சொறிசிரங்குகள் வர இவனே காரணம். இந்தச் சாபம், இவனுக்கு, தேவர்களால் ஏற்பட்டது. ஒரு மண் சட்டிக்குக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, சாணியால் முகம் அமைத்து, வீட்டிலுள்ள பாட்டிமார்கள் அதற்குப் பூசைபோடுவார்கள். சாஞ்சொறி இலையாலும், துர்நாற்றமுள்ள மலராலும் அர்ச்சனை செய்வார்கள். பூசை நடக்குமிடத்தில், வீட்டிலுள்ள சிறுவர் சிறுமியர் குழுமியிருப்பார்கள். சிறுவர்களிடம் 'தடி' ஒன்று தயாராக இருக்கும். பூசை முடிந்தவுடன் சிறுவன் ஒருவன் மற்றவர்களை முந்திக்கொண்டு; சட்டியைத் தடியால் அடித்து உடைத்து விடுவான். இப்படிச்செய்வதால் சொறிசிரங்கு துர்தேவதையான கண்டகர்ணன், அந்த வீட்டுப் பக்கமே வரமாட்டான்" என்பது வங்காளிகளுக்கிடையேயுள்ள ஒரு நம்பிக்கையாம்!!

*

வங்காளியையும் தமிழனையும் பார்த்தால், வேற்றுமைகளைவிட, ஒற்றுமைகள் அதிகம் தெரியும் எனபார்கள். அவர்களுடைய புத்தாண்டும் ஏப்ரல் 14-ந்தேதிதான், இங்குபோலத் துவங்குகிறது. சித்திரைமுதல் தேதியை அவர்கள் வைசாகம் முதல்தேதி என்று சொல்கிறார்கள். தமிழ் ஆண்டுப பிறப்பு நாளை அவர்கள் சைத்திரசங்கராந்தி என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும், புரோகிதர் வந்து, புதுப்பஞ்சாங்கம் வழங்கி, வாசித்துப் பலாபலன்களைச் சொல்லிவிட்டு தட்சணை பெற்றுச் செல்லும் பழக்கம் அங்கும் உண்டாம்!!

*

அம்மை வந்தால், அம்மனை திருப்திசெய்யவேண்டும் என்று இங்கு சொல்லப்படுவதுபோல, வங்கத்திலும் உண்டாம். வைசூரி அம்மனை, வங்காளிகள், மகாமாரி அல்லது சீதளமாய் என்று அழைக்கின்றனர். காலராவுக்கும், இங்குபோல காளிதான் காரணம், அங்கும். வங்காளிகளிடம் பக்தி அதிகம் உண்டு. ஏராளமான விரதங்களும், இட்டத்தட்ட நூறுவகைப் பூசைகளும் நடத்துகிறவர்கள். தினம் காளிகோவிலில் நின்று, 'அம்மா நீ சும்மாயிருப்பதும் ஏனோ?' என்று பலர், குழந்தைகளைப்போல, அழுவராம். இவ்வளவு பக்தியும் நம்பிக்கையும் கொண்ட, வங்க மக்கள், டாக்டரிடம் போவதில்லையா! சகலமும் ஆண்டவன் செயல் என இருக்கிறார்களா எனக் கேட்காதீர்கள்!! அவர்களை ஆளும், காங்கிரஸ் முதலமைச்சர், பி. சி. ராயே, ஒரு டாக்டர்தான். அங்குதான், சீர்திருத்த எண்ணங்களும் புதுமை எழுத்துக்களும், வெற்றிகண்டு வருகின்றன இன்று.

*  *  *

உயிர் தப்பி ஓடிவந்தால் போதும் என்று திபெத்தை விட்டு, இந்திய உபகண்டத்துக்குள் நுழைந்திருக்கிறாரல்லவா, டலாய்லாமா. அவருடைய மகாத்மியம்பற்றி, ஒரு நிருபர், பிரமாதமாக எழுதியிருக்கிறார். அவர், கிளம்பி இந்தியாவுக்குள் அடியெடுத்துவைத்த ஒரு வாரம்வரையிலும் இமயமலைச் சாரல்களில் கருமேகம் சூழ்ந்துகொண்டு, மழைவருமோ என்று அச்சமூட்டிக்கொண்டு இருந்ததாம். இப்படியில்லாதிருக்குமானால்; துணிந்து சீனர்கள், டலாய்லாமாவைத் தேடி, தமது படையுடன் பிடித்திருப்பார்களாம். அவர்கள் கையில் அகப்படக் கூடாதென்பதற்காகவே; தமக்குள்ள கடவுள் சக்தியைக்கொண்டு, இப்படி மேகங்களை உண்டாக்கிக்கொண்டார் என்கிறார் நிருபர்! இச்செய்தினை இலண்டனிலிருந்துவரும் டைம்ஸ் ஏட்டுக்கும் அனுப்பி, பிரமாதப் படுத்தியிருக்கிறார். வேண்டும் போது மழை பெய்விக்கவும், வெயிலை உண்டாக்கவுமான சக்தி, லாமாக்களுக்கு உண்டாம். அந்தச் சக்தியினையே டலாய்லாமா, உபயோகித்திருக்கவேண்டும் என்கிறார், நிருபர். ஏன் அந்தக் கடவுள் சக்தியைக்கொண்டு, சீனர்களையே, லாசாவுக்குள் வராமல் விரட்டியிருக்கக்கூடாது? இப்படி கால்களில் கல்குத்த, திருட்டுத்தனமாகத் தப்பித்தேன், பிழைத்தேன் என்று ஓடிவர வேண்டும் என்று கேட்கத்தானே செய்வான் பகுத்தறிவுள்ளவன்?

*

பாலைவனத்தைச் சோலையாக்கும் சக்தி, சித்திபெற்ற முக்தர்களுக்கு இருப்பதை நாம் அறியோம்; ஆனால், விஞ்ஞானிகளுக்கு இருக்கிறது என்பதை இராஜஸ்தான் பாலைவனத்தில் காட்டியிருக்கிறார்கள். சென்னை மாநகரம் அளவுக்குப் பரப்புள்ள இடம், இராஜஸ்தான் பாலைவனத்தில், நீரோடையும் நிலவளமும் கொண்டு விளங்குகிறதாம். ஒரு காலத்தில் வெறும் மணல்மேடாக இருந்தது! இப்போது, தங்கநிறக் கதிர்கள் அசைந்தாடும் அழகு வயல்களாக உள்ளதாம்!! எப்படித்தான் பூமியிலிருந்து தண்ணீர்பெருகுகிறதோ என்று அதிசயிக்கும்படியிருக்கிறதாம். நடந்தால், நெருப்பாகச்சுட்டது, ஒரு காலம். இப்போது, வளங்கொழுக்கும் பூமியாக வளர்கிறது. ஏப்ரல் முதல்தேதி, தன மகள் இந்திரா தேவியுடன் போய்ப் பார்த்த பண்டித நேரு ஆச்சரியமடைந்தாராம். பாலைவனத்தைச் சோலைவனமாக்கும் பெரிய பெரிய இயந்திரங்களை 75-இலட்ச ரூபாய்க்கு நன்கொடையாக அளித்து, தனது விஞ்ஞானிகள் மூலம் இச்சாதனையைச் செய்ய உதவியிருப்பது, ரஷ்யாவாகும். அங்கு, அம்மனோ, காளியோ, லாமாவோ; கிடையாது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!!

★

எப்ரல்
௯
முதல்
...சென்னை...
வெலிங்டன்
ஸ்ரீ கிருஷ்ணா · உமா
மற்றும் தென்னாடெங்கும்
ஸ்ரீ
புரொடக்ஷன்ஸ்
நல்ல தீர்ப்பு
டைரக்ஷன் : T. பிரகாஷ் ராவ்
முரசொலி மாறன் M.A.
சங்கீதம்
ஒளிப்பதிவு
S.M. சுப்பையா
கமல் கோஷ்
வாஹினி விஜயா
... தயாரிப்பு ...
சுந்தர்லால் நஹாதா
ஸ்ரீ புரொடக்ஷன்ஸ்.
77 கிரி ரோடு, சென்னை.
G.H. RAO
ARUNA